# ஸ்வாமிகளின்
# ஜன்ம பூமி

அயோத்தியில் ஸ்ரீ ராமஜன்ம பூமியும் மதுராவில் ஸ்ரீக்ருஷ்ணஜன்ம பூமியும் காலடியில் ஆதிசங்கரரின் ஜன்மபூமியும் இருக்கிறது. ஸ்ரீ ஸ்வயம்ப்ரகாசாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஜன்மபூமி ஆலங்குடியில் இருக்கிறது. அதுவேறு ஒருவரிடம் கைமாறிப் போய்விட அதை விலைக்கு வாங்கி ஒரு வீடு கட்ட வேணும், அதற்கு ஏற்பாடு செய் என்று ஸ்ரீ அண்ணா தண்டபாணியிடம் சொல்லி இருந்தார். அந்த மண்ணை ஸ்வாதீனப்படுத்தியிருந்த குடித்தனக்காரர் நல்ல வேளையாக அதைக் கொடுத்துவிட ஸம்மதித்தார். அதை வாங்கிவிட ஸ்ரீமதி காமாக்ஷி ஸ்ரீநிவாஸன் தம்பதிகள் பொருளுதவி செய்தார்கள்.

அந்த மனைக்கட்டு நமது ஸ்ரீ ஆலங்குடி ஸ்வயம் ப்ரகாசாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனா டிரஸ்ட் பெயரிலேயே விலைக்கு வாங்கி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனைக்கட்டில் ஒரு வீடு கட்டவேணுமென்றும் அதற்கு **''ஸ்வயம் ப்ரகாசம்''** என்று பெயர் வைக்க வேண்டும் என்றும், தினமும் மாலை அந்த வீட்டில்

''ஹரேராம ஹரேராம ராம ராம ஹரேஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே''

என்ற மஹாமந்த்ர பஜனையும், அன்னதானமும் நடைபெற வேண்டும் என்று ஸ்ரீ அண்ணா க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் நியமித்துள்ளார். ஆஸ்திகர்கள் பொருளுதவியால் இந்த தர்மம் நடைபெறும் என்று நம்புகிறோம். பொருளுதவியை மேற்படி டிரஸ்டுக்கு செய்யலாம்.

